# IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE, TIRUVANNAMALAI.

## O.S. NO.23 /2018

**18.08.2022 - வா.சா. 1 போர்மன்னன் சத்திய பிரமாணத்தின் பேரில் பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

சென்னை உயர்நீதிமன்றத்தில் 2ம் பிரதிவாதியும் அவரது தகப்பனாரும் எனக்கு எதிராக ஒரு ரிட் மனுவில் ஒரு உத்தரவு பெற்றுள்ளார்கள் என்றால் இந்த வழக்கிற்கு சம்மந்தம். ஆனால் அந்த உத்தரவில் என் பெயர் உள்ளது. மேற்சொன்ன ரிட். மனுவின் பெயரில் திருவண்ணாமலை காவல் நிலையத்தார் என்னை அழைத்து விசாரித்தார் என்றால் சரியல்ல. நான் காவல் நிலையத்திற்கே செல்லவில்லை. வா.சா.ஆ.2ல் ரவீந்திர செட்டியார் தாவா சொத்தை எந்த வித பாராதீனமும், வில்லங்கமும் செய்யமாட்டார் என்று என்னிடம் கூறியதாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். ரவீந்திர செட்டியார் தாவா சொத்தை அவருடைய பிள்ளைகளுக்கு உயில் எழுதி வைத்துள்ளார் என்றால் அதைப்பற்றி எனக்கு தெரியாது. வா.சா. ஆ.2 வழக்கறிஞர் அறிவிப்பு நான் சொல்லி என் வழக்கறிஞர் தயார் செய்தார். வா.சா.ஆ.2 5ம் பத்தியில் ரவீந்திர செட்டியார் என் மீது புகார் கொடுத்ததாகவும், நான் காவல் நிலையத்திற்கு விசாரணைக்கு சென்றேன் என்று சொன்னால் சரியல்ல. வா.சா.ஆ.2 அவ்வாறு சொல்லப்படவில்லை. அவ்வாறு வா.சாஆ.2 ல் சொல்லப்பட்டிருந்தால் அது தவறாகும். நான் ஒரு பொய்யான கிரைய ஒப்பந்தத்தை ரவீந்திர செட்டியார் இறந்த பிறகு தயார் செய்து அவரது வாரிசுகள் மீது இவ்வழக்கை தாக்கல் செய்தள்ளேன் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1ல் உள்ள கையெழுத்து ரவீந்திர செட்டியாரின் கையெழுத்தே இல்லை என்று சொன்னால் சரியல்ல. நான் உண்மையிலேயே தாவா சொத்தை வாங்க வேண்டும் என்ற எண்ணன் இருந்திருந்தால் வா.சா. ஆ.1 பதிவு செய்யப்பட்டிருக்கும் என்று சொன்னால் சரியல்ல. வா.சா.ஆ.1ல் இருக்கும் ரவீந்திர செட்டியாரின் கையெழுத்து உண்மையான கையெழுத்து இல்லை என்றும், அவர் அதில் கையெழுத்தும் போடவில்லை என்று சொன்னால் சரியல்ல. இவ்வழக்கை தாக்கல் செய்யும் போது ரவீந்திர செட்டியாரின் வாரிசுதாரர்கள் திருவண்ணாமலையில் குடியிருக்கவில்லை என்று சொன்னால் சரிதான். நான் வேண்டுமென்றே திருவண்ணாமலை விலாசம் போட்டு பிரதிவாதிகள் மீது ஒரு தலைப்பட்ச தீர்ப்பு பெற்றுள்ளேன் என்றால் சரியல்ல. நான் சொத்தை அபகரிக்க வேண்டும் என்ற எண்ணத்தில் இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

ஒம்/- போர்மன்னன்

Taken down by me in Open Court read over ot the witness and to knowledged by him/her as correct

Sd/- Irusan Poonguzhali,
Additional District Judge,
Tiruvannamalai.